பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

15 01 2025 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்திய கடற்படையின் இரண்டு போர்க் கப்பல்களையும், ஒரு நீர்மூழ்கிக் கப்பலையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி மும்பையில் இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

2. மத்திய அரசு தொடங்கியுள்ள தேசிய மஞ்சள் வாரியம், விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் பொருளாதார நிலையை ஊக்குவிப்பதாக அமையும் என்று மத்தியஇணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. சென்னை சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள கிராமியக் கலைஞர்களுக்கான ஒருநாள் ஊதியத்தை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

4. பொங்கல் பண்டிகையின் அடுத்த நாளான மாட்டுப் பொங்கல் இன்று மாநிலம் முழுவதும் வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

5. இந்தியா – அயர்லாந்து அணிகளுக்கு இடையே 3வது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

இந்திய கடற்படையின் இரண்டு போர்க் கப்பல்களையும், ஒரு நீர்மூழ்கிக் கப்பலையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி மும்பையில் இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

மகாராஷ்டிர தலைநகர் மும்பையில் உள்ள கடற்படை கப்பல் தளத்தில்

நடைபெறும் நிகழ்ச்சியில் ஐ.என்.எஸ். சூரத், ஐ.என்.எஸ்.நீலகிரி, ஐ.என்.எஸ். வாக் ஷீர் ஆகிய மூன்று கப்பல்களை பிரதமர் அர்ப்பணிக்கிறார்.

இவற்றில் ஏவுகணை அழிப்பு போர்க்கப்பலான ஐ.என்.எஸ். சூரத், 25 சதவீதம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதாகும் என்றும், நாட்டின் வளர்ந்து வரும் உள்நாட்டு நிபுணத்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் இவை அமைந்துள்ளதாகவும் மத்திய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு உற்பத்தி மற்றும் கடல்சார் பாதுகாப்பில் உலக அளவில் இந்தியா முன்னணி நிலையை எட்டுவதற்கு இந்த போர்க்கப்பல்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து நவி மும்பையில் உள்ள கார்கரில் புதிதாக கட்டப்பட்டுள்ள இஸ்கான் கோவிலையும் பிரதமர் திறந்து வைக்க உள்ளார்.

தமது மகாராஷ்டிர பயணம் குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், நாட்டின் கடற்படைத் திறனைப் பொறுத்தவரையில் இன்று சிறப்பானதொரு நாளாக இருக்கும் என்றும், முன்னணி கடற்படை போர்க்கப்பல்களை அர்ப்பணிப்பதன் மூலம் உலகளாவிய பாதுகாப்பில் இந்தியாவின் தலைமைத்துவம் வலுப்பெறுவதுடன், தற்சார்பை நோக்கிய நமது பயணத்தில் தன்னம்பிக்கை மேலோங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் பத்து அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றி நல்லாட்சி நடைபெற்று வருவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உறுதியான தலைமை, சட்டம் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய ஆட்சி, உரிய நேரத்தில் திட்டங்களை செயல்படுத்துதல் போன்ற செயல்பாடுகளின் அடிப்படையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

தமிழ்நாட்டின் வளமையான கலாச்சார பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் தில்லி பாரத் மண்டபத்தில் 27 அடி உயர நடராஜர் சிலை அமைக்கப்பட்டிருப்பதை மத்திய அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

உணவு, உடை, உறைவிடம், கல்வி, சுகாதாரத்துறையில் டிஜிட்டல் கட்டமைப்பு, எரிவாயு இணைப்புகள் போன்ற அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு சாதனைத் திட்டங்களையும் திரு. பியூஷ் கோயல் தமது உரையில் பட்டியலிட்டார்.

<<<<>>>>

நாடு முழுவதும் மஞ்சள் பயிரிடும் விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் பொருளாதார நிலையை ஊக்குவிக்கும் வகையில் தேசிய மஞ்சள் வாரியம் திகழும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று மத்திய தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் மஞ்சள் வாரியம் தொடங்கி வைத்திருப்பதை சமூக வலைதளத்தில் பதிவிட்டு அமைச்சர் திரு. எல். முருகன் இதனைத் தெரிவித்துள்ளார். மஞ்சள் குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொண்டு அந்த துறையை மேம்படுத்திட இந்த வாரியம் பெரிதும் உதவும் என்று அவர் கூறியுள்ளார்.

ஈரோடு பகுதியில் மஞ்சள் பயிரிடும் விவசாயிகளும், மஞ்சள் வர்த்தகர்களும் பயனடைவதுடன், தமிழ்நாட்டின் மஞ்சள் உலக சந்தையில் தனியிடம் பெறுவதற்கான வாய்ப்பாக அமையும் என்று குறிப்பிட்டுள்ள திரு. எல். முருகன், இதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயலுக்கும் விவசாயிகள் மற்றும் நாட்டு மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் மகரசங்கராந்தி தினமான நேற்று திரிவேணி சங்கமத்தில் மூன்று கோடியே 50 லட்சம் பேர் புனித நீராடினர்.

பல்வேறு மாநிலங்களில் இருந்து வரும் பயணிகளுக்கு உதவும் வகையில் மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் சார்பில் ‘பாஷினி’ என்ற பன்மொழி தொழில்நுட்ப வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

11 மொழிகளில் இந்த தொழில்நுட்பம் மூலம் தகவல்களை அறிந்துகொள்ள முடியும்.

கூட்ட நெரிசலில் யாராவது காணாமல் போனால் அவர்கள் தங்களின் தாய்மொழியிலேயே ஒலிபெருக்கியில் அறிவித்து அவர்களை கண்டுபிடிக்க இந்த தொழில்நுட்பம் வகை செய்கிறது.

இதற்காக மொபைல் செயலியுடன் கூடிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கும்பமேளாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உதவுவதற்காக 112 அவசர தொலைபேசி எண்கள் காவல்துறையினரால் வழங்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சென்னை சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள கிராமியக் கலைஞர்களுக்கான ஒருநாள் ஊதியத்தை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளையும், பண்பாட்டையும் வளர்க்கும் வகையில் சென்னை சங்கமம் - நம்ம ஊர் திருவிழா என்ற பெயரில் மாநகரின் 18 இடங்களில் வரும் 17ஆம் தேதி வரை பல்வேறு கலை நிகழ்ச்சிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

இந்த நிகழ்ச்சிகளில் பங்குபெறும் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒருநாள் ஊதியத்தை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

பொங்கல் பண்டிகையின் அடுத்த நாளான இன்று மாட்டுப் பொங்கல் மாநிலம் முழுவதும் வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

விவசாயிகள் தங்களின் தொழிலுக்கு பெரிதும் உதவும் கால்நடைகளுக்கு படையலிட்டு வணங்கும் பண்டிகையாக இது அமைகிறது.

மாட்டுப் பொங்கலை ஒட்டி காலை முதலே மாடுகளை குளிப்பாட்டி, கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி அலங்கரித்து, பொங்கல் வைத்து மக்கள் வழிபட்டு வருகிறார்கள்.

<<<<>>>>

மதுரை மாவட்டம் பாலமேட்டில் இன்று ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன.

அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட்டி நேற்று நிறைவடைந்த நிலையில், பாலமேட்டில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தஜிகிஸ்தானில் நேற்று மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது நான்கு புள்ளி ஒன்றாக பதிவானது.

-------------

ஐந்து நாள் பயணமாக நேற்றிரவு புதுதில்லி வந்த சிங்கப்பூர் அதிபர் திரு. தர்மன் சண்முகரத்தினத்தை மத்திய இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா வரவேற்றார்.

-------------

ஸ்பெயின் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் அந்நாட்டு அதிபர் திரு. **Pedro Sanchez Perez**-ஐ சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்தினார்.

--------------

கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவரான சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 178வது ஆராதனை விழாவை திருவையாறில் நேற்று மகாராஷ்டிர ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

---------------

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விவசாயம் சார்ந்த தொழில், தமிழர்களின் கலை, கலாச்சாரத்தை பறைசாற்றும் மருதம் நிகழ்ச்சியை விழுப்புரத்தில் அமைச்சர் திரு. பொன்முடி நேற்று தொடங்கி வைத்தார்.

----------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பங்கேற்கும் வகையில் நவீன ஜல்லிக்கட்டு என்ற பெயரில் கோழி பிடிக்கும் போட்டி நடைபெற்றது.

-----------

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர் தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர் திரு. வி.சி. சந்திரகுமார் தனது பிரச்சாரத்தை தொடங்கினார்.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா – அயர்லாந்து அணிகளுக்கு இடையே 3வது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் இப்போட்டி காலை 11 மணிக்கு தொடங்குகிறது.

ஏற்கனவே முடிவடைந்த 2 ஒருநாள் போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்று தொடரை வென்றுள்ளது.

---------------

உலகக்கோப்பை கோ-கோ போட்டியில் இந்திய ஆடவர் அணி பிரேசில் அணியை வென்றது.

---------------

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் குணசிகா அணி – சூர்மா அணியை வென்றது.

--------------

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி மற்றும் கோவா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் சமனில் முடிந்தது.

-------------

இந்திய ஓபன் பேட்மிட்டன் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**